# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>

**அசல் வழக்கு எண்.** 46/20

வாக்குமூலம்..வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிநாதன் | தொழில் | |
| த/பெ. | நீலமேகம் (எ) கருப்பையா தேவர் | வயது | 45 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 25.03.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் மொத்தம் 10 அயிட்ட சொத்துகளுக்கு வழக்கு போட்டியிருக்கிறேன். 2, 3 வாதிகளுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு தாவா 9, 10 அயிட்டட சொத்துகளை 2, 3 வாதிகளிடம் இருந்து கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். தாவா 9, 10 அயிட்டட சொத்துகளை பொருத்த வரை வழக்கு நிலுவையில் இருக்கும்போது நான் கிரையம் வாங்கியிருப்பதால் அந்த கிரையம் lispendence என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ளதால் மேற்படி சொத்துகளை பொருத்து எனக்கு வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. தாவா 9, 10 அயிட்டட சொத்துகளை பொருத்து 2, 3 வாதிகளுக்கு எந்த பரிகாரமும் தேவையில்லை என்றால் சரிதான். தாவா எதிர் வழக்குரையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன்.

2. சொத்துகள் அனைத்தும் என் பிராது படி என் கிரைய முன்னோர்களுக்கு நில ஒப்படைப்பு வழங்க பட்ட சொத்து என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். மேற்படி நில ஒப்படை உத்தரவு என் கிரைய ஆவண பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இணைக்கப்படவில்லை. மேற்படி என்னால் கிரையம் பெறப்பட்ட 10 கிரைய ஆவணத்தில் நில ஒப்படை ஆவணம் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இணைக்கப்படவில்லை ஆனால் நில ஒப்படை ஆவணம் என் கைவசம் தான் இருக்கிறது.

3. என் தகப்பனார் கிரையம் வாங்கிய கிரையம் முன்னோர்கள் எங்களுக்கு நெருங்கிய உறவினர்களா என்றால் அவர்கள் பிரதிவாதிகளுக்கும் உறவினர்கள் தான் அவர்கள் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். மேற்படி என் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த ராமகிருஷ்ணன் மனைவி தைலம்மை எனக்கு என்ன உறவு என்றால் தாய்மாமன் மனைவி. தைலம்மை என் மனைவியின் தாயார். என் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த விசாலாட்சி எனக்கு பெரியம்மா உறவாகும். செல்வம் (எ) கருப்பையா, நாராயணன், மணிமுத்து, செல்லுத்துரை, அவரது மனைவி வாசகி, அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் வடக்கு மஞ்சாக்கரை கிராமம் என்றால் சரிதான். அது ஒரு குக்கிராமம், இரண்டும் ஒரே வருவாய் கிராமத்தை சேர்ந்தவர்கள் தான்.

4. ராமையாதேவர் எனக்கு பங்காளி உறவு என்றால் சரிதான். ராமையாதேவர் வாரிசனா செல்வம் (எ) கருப்பையா என்பவரிடம் கிரையம் வாங்கிய புல எண். மற்றும் நான்கெல்லை மற்றும் வழக்கில் எத்தனையாவது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் எனக்கு வடக்கில் 10 புல எண்கள் இருப்பதால் சரியாக ஞாபகமில்லை. எனக்கு வழக்கு 10 அயிட்ட சொத்துகளுக்கும் புல எண்கள் மற்றும் நான்கெல்லை மற்றும் எத்தனையாவது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. 1 முதல் 8 அயிட்ட சொத்துகள் கிரையம் வாங்கிய தேதிகள் 09.04.2015 மற்றும் 10.04.2015 என்றால் சரிதான்.

5. மேற்படி கிரையத்திற்கு முன்பே மேற்படி 1 முதல் 8 அயிட்ட சொத்துகள் எனது அனுபவத்தில் இருந்தது என்றால் சரியல்ல. நில ஒப்படைத்தாரர்கள் அனுபவத்தில் இருந்தது. நான் சொல்வது தவறு என்றாலும், தாவா 1 முதல் 10 அயிட்ட சொத்துகளில் சரிபாதி வடபுறம் பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமான புல எண்கள் 88/12 , 88/11 ஆகிய புல எண்களுடன்சேர்ந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றாலும், தென்புறம் நாங்கள் அனுபவம் செய்து வந்தோம் என்றாலும், நில ஒப்படைத்தாரர்கள் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் சொத்தை என் தகப்பானாருக்கு கிரையம் கொடுத்த கிரையம் முன்னவர்களுக்கு எப்போது ஒப்படைப்பட்டா வழங்கப்பட்டது என்றால் 1998-ல் வழங்கப்பட்டது.

6. வழக்கில் உள்ள 2, 3 வாதிகள் கூத்தங்குடி கிராமத்தை சேர்ந்தவர்கள் இல்லை என்றால் சரிதான். பக்கத்து குக்கிராமம் ஆன வடக்கு மஞ்சாக்கரையை சேர்ந்தவர்கள். 2-ம் வாதி ரமேஷ்குமார் முன்பு வடக்கு மஞ்சாக்கரையில் குடியிருந்து

தற்போது கூத்தங்குடி அருகே வீடு கட்டியிருக்கிறார். தாவா கிராமமான கூத்தாங்குடி கிராமத்தில் எனது தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த நபர்கள் வசித்து இருக்கிறார்களா என்றால் இல்லை. மஞ்சாக்கரை கிராமத்தில் வசித்தார்கள். 1998-ல் இருந்து என் தகப்பனார் கிரையம் வாங்கிய தேதி வரை மேற்படி கிரைய முன்னோர்கள் கூத்தங்குடி கிராமத்தில் வசித்ததற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

7. என் தகப்பனாரின் கிரைய முன்னோர்களுக்கு அவர்கள் வசித்த கிராமத்தில் தனியாக வீடு மனைக்கட்டு இருக்கிறது என்றால் சரிதான். சாட்சி தற்போது அனைவருக்கும் இல்லை என்றும் ராமையாதேவர் பெயரில்தான் மனைக்கட்டு இருந்தது என்று கூறுகிறார். எனது கிரைய முன்னோர்கள் எவருக்கும் ஒரு குழி கூட சொந்தமாக இல்லாத நபர் கிடையாது என்றால் சரியல்ல. ஒரு சிலருக்கு இடம் இல்லை. யார், யாருக்கு இடம் இல்லை என்றால் ரமேஷ், செல்லத்துரை, விசாலாட்சி, ஆகியோருக்கு வீடு இல்லை. அவர்களது அப்பா வீட்டில் இருந்தார்கள். அவர்களது அப்பாவிற்கு மனைக்கட்டு இருந்தது என்றால் சரிதான். மேற்படி விசாலாட்சிக்கு விசாலாட்சியின் கணவர் கருப்பையா பேரில் வீடு இருந்தது.

8. தைலம்மை கணவர் ராமகிருஷ்ணனுக்கு 5 வேலி நிலம் இருக்கிறது என்றால் இல்லை. ராமகிருஷ்ணனுக்கு எவ்வளவு சொத்து இ,ருக்கும் என்றால் 15 ஏக்கர் இருக்கும். ராமையாதேவருக்கு எவ்வளவு சொத்து இருக்கும் என்றால் தெரியாது.. ராமையாதேவருக்கு ஒரு வேலி சொத்து இருக்கிறது என்றால் அவ்வாறு இருக்க வாய்ப்பு இல்லை. எங்கள் கிரைய முன்னோர்கள் தகப்பனார் ராமையாதேவருக்கு ஒரு வேலி சொத்து உள்ளது என்றாலும், அதை நான் வேண்டும் என்று தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது கிரைய முன்னோர்களுக்கு நில ஒப்படை கொடுக்கப்பட்டபோது அதில் கண்ட நிபந்தனையின் படி வீடு கட்டி குடியிருந்தார்களா என்றால் இல்லை.

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**